### 200 அடி கிணறு விவகாரம்

# ஓபிஎஸ்சுக்கு மக்கள் கெடு



**பெரியகுளம், ஜூன் 28:** தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே லட்சுமிபுரம் கிராமத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளருக்கு சொந்தமான இடத்தில், 200 அடி ஆழத்தில் பிரமாண்ட கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதில் 200 எச்பி மோட்டார்கள் பொருத்தி தண்ணீர் எடுக்கப்படுகிறது. இதனால் கிராமத்தில் உள்ள சமுதாய கிணறுகளில் நீர் கிடைப்பதில்லை; குடிநீர் பிரச்னை ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்து வந்தனர். அதே போன்று மேலும் 2 கிணறுகள் தோண்டும் பணி கடந்த வாரம் தொடங்கியது. இதனால் கிராம மக்கள் கொதிப்படைந்தனர்.

கிணறு தோண்டுவதை நிறுத்தக்கோரி கடந்த 22ம் தேதி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் போராட்டம் நடத்தினர். பெரியகுளம் ஆர்டிஓ ஆனந்தி ஒரு கிணற்றை பார்வையிட்டு பணிகளை நிறுத்தி வைக்க உத்தரவிட்டார். மற்றொரு கிணறு குறித்து ஆய்வு செய்து 26ம் தேதி தெரிவிக்கப்படும் என்றார். இதனால் மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

ஆனால், 26ம் தேதி கடந்தும் ஆர்டிஓ எதுவும் தெரிவிக்கவில்லை. கிணறு தோண்டும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இதையடுத்து பொது மக்கள் நேற்று முன்தினம் இரவு, கிராமக்கூட்டம் நடத்தினர். இதில், வரும் 30ம் தேதிக்குள் பன்னீர்செல்வம் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த பேச்சுவார்த்தை தாலுகா அலுவலகம் போன்ற பொது இடங்களில் நடைபெற வேண்டும். பன்னீர்செல்வத்தின் வீட்டிற்கு சென்று பேச நாங்கள் செல்ல மாட்டோம். இது தவறும்பட்சத்தில் தொடர் போராட்டங்களில் ஈடுபடுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

### திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு வந்த

# அமித்ஷாவை வரவேற்க அதிமுக அணிகள் கடும் போட்டி

**திருவண்ணாமலை, ஜூன் 28:** பாஜ தேசிய தலைவர் அமித்ஷா நேற்று காலை 10.45 மணியளவில் ஹெலிகாப்டர் மூலம் திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி மைதானம் வந்தடைந்தார். அவரை மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழக பாஜ தலைவர் தமிழிசை உள்ளிட்டோர் வரவேற்றனர்.

திருவண்ணாமலை வந்த பாஜ தலைவர் அமித்ஷாவை வரவேற்க அதிமுகவின் 3 அணியினரும் போட்டி போட்டனர். எடப்பாடி பழனிச்சாமி அணியைச் சேர்ந்த அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன், ஓ.பன்னீர்செல்வம் அணியைச் சேர்ந்த திருவண்ணாமலை எம்பி வனரோஜா, டிடிவி தினகரன் அணியைச் சேர்ந்த எம்எல்ஏக்கள் பன்னீர்செல்வம், தூசி மோகன் ஆகியோர் வரவேற்பு அளித்தனர்.

## போலீசாருடன் பெண் எம்.பி வாக்குவாதம்



திருவண்ணாமலை வந்த பாஜ தலைவர் அமித்ஷாவை வரவேற்க, அரசு கலைக்கல்லூரி வளாகத்திற்குள் செல்ல அனுமதி மறுத்த போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட எம்.பி. வனரோஜா.

இந்நிலையில், எம்பி வனரோஜா, அமித்ஷாவுக்கு வரவேற்பு அளிக்க, அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் தளத்துக்கு செல்ல முயன்றார். நுழைவாயிலில் போலீசார் அவரை தடுத்து நிறுத்தினர். வரவேற்போர் பட்டியலில் உங்களுடைய பெயர் இல்லாததால் அனுமதிக்க முடியாது என்றனர்.

இதனால், ஆவேசம் அடைந்த வனரோஜா, நான் இந்த தொகுதியின் எம்பி, எனக்கே அனுமதியில்லையா என போலீசாருடன் கடும் வாக்குவாதம் செய்தார். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து, ரமணாஸ்ரமம் அண்ணாமலையார் கோயிலுக்கு அமித்ஷா சென்றார். பின்னர், ஹெலிகாப்டர் மூலம் சென்னை சென்றார்.

**போலீசுடன் தமிழிசை மோதல்:** முன்னதாக 100க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் ஊர்வலமாக சென்று வரவேற்பு அளிக்க பாஜகவினர் திட்டமிட்டனர். அதையொட்டி, ரமணாஸ்ரமம் எதிரில் வாகனங்களுடன் திரண்டிருந்தனர். இதற்கு எஸ்பி பொன்னி அனுமதி மறுத்தார். மாநில தலைவர் தமிழிசை சவுந்திரராஜன், நாங்கள் ஊர்வலம் நடத்துவோம், முடிந்தால் வழக்குப்பதிவு செய்யுங்கள், அதையும் சந்திக்கிறோம் என்றார். அதனால், பதற்றம் ஏற்பட்டது. அதன்பின் அனுமதி அளிக்கப்பட்டது.

### கிரண்பேடி பரிந்துரையின்பேரில்

# சென்டாக் அலுவலகத்தில் சிபிஐ அதிரடி ரெய்டு

**புதுச்சேரியில் பரபரப்பு**



**காலாப்பட்டு, ஜூன் 28:** கவர்னர் கிரண்பேடி பரிந்துரையின் பேரில் சென்டாக் அலுவலகத்தில் சிபிஐ நேற்று அதிரடியாக சோதனை செய்தது.

புதுச்சேரி முதுநிலை மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கையில் முறைகேடுகள் நடந்து வருவதாக பெற்றோர், மாணவர்கள் தரப்பில் இருந்து பல்வேறு புகார்கள் எழுந்தது. இதையடுத்து காலாப்பட்டு பொறியியல் கல்லூரியில் உள்ள சென்டாக் அலுவலகத்துக்கு கவர்னர் கிரண்பேடி நேரடியாக சென்றார். அப்போது மாணவர்களின் பல்வேறு புகார்கள் குறித்து கன்வீனர் கோவிந்தராஜ் உள்ளிட்ட அதிகாரிகளிடம் சரமாரி கேள்வி எழுப்பினார். தொடர்ந்து காலி இடங்களுக்கு மீண்டும் கவுன்சலிங் நடத்த உத்தரவிட்டார்.

மாணவர் சேர்க்கை விவகாரத்தில், புதுச்சேரி மாணவர்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளதாகவும், முறைகேடு நடந்திருப்பதாகவும் ஆட்சியாளர்கள் மீது கிரண்பேடி குற்றம் சாட்டினார். இதற்கு மறுப்பு தெரிவித்த முதல்வர் நாராயணசாமி, மாணவர் சேர்க்கையில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. இதனை நிரூபிக்க முடியுமா? என சவால் விடுத்தார்.

எனவே இவ்விவகாரத்தில் உடனடியாக சிபிஐ விசாரணை நடத்த வேண்டுமென கிரண்பேடி கோரினார். எந்தவொரு விசாரணைக்கும் நான் தயார் என நாராயணசாமி பதில் தெரிவித்தார்.

இதையடுத்து சிபிஐ அதிகாரிகள் 7 பேர் கொண்ட குழுவினர் காலாப்பட்டு பொறியியல் கல்லூரியில் உள்ள சென்டாக் அலுவலகத்துக்கு நேற்று வந்தனர்.

சென்டாக் கன்வீனர் கோவிந்தராஜ், இணை கன்வீனர் பழனிராஜா, கருணாகரன் உள்ளிட்டோரிடம் ஆவணங்களை காட்டி துருவி, துருவி விசாரணை நடத்தினர். விசாரணைக்கு தேவைப்படும் முக்கிய கோப்புகளையும் கைப்பற்றினர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. கிரண்பேடி பரிந்துரையை ஏற்று சிபிஐ விசாரணையை துவங்கியிருப்பது, புதுச்சேரி அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

### மார்த்தாண்டம் அருகே கனமழை

# தண்டவாளத்தில் மண்சரிவு பயணிகள் ரயில் தப்பியது

**மார்த்தாண்டம், ஜூன் 28:** மார்த்தாண்டம் அருகே கனமழையால் தண்டவாளத்தில் சரிந்து விழுந்த மண் குவியலில் கொச்சுவேளி ரயில் மோதி நின்றது. ரயில் மெதுவாக இயக்கப்பட்டதால் விபத்தில் இருந்து தப்பியது.

நாகர்கோவில் - திருவனந்தபுரம் ரயில் பாதையில் மார்த்தாண்டம் அருகே கண்ணக்கோடு பகுதியில் தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே சுரங்கப்பாதை உள்ளது. இந்த பகுதியில் தண்டவாளத்தின் இருபுறமும் உயரமான மண் மேடுகள் உள்ளன. கடந்த சில தினங்களாக குமரி மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. நேற்றும் மழை நீடித்தது. இதனால் காலை 9 மணியளவில் கண்ணக்கோடு சுரங்கப்பாதை அருகே திடீர் மண்சரிவு ஏற்பட்டு தண்டவாளத்தை மண் மூடியது.

நாகர்கோவிலில் இருந்து கொச்சுவேளிக்கு செல்லும் ரயில் குழித்துறை ரயில்நிலையத்தில் இருந்து புறப்பட்டு வந்தது. கனமழை பெய்ததால் டிரைவர் ரயிலை மெதுவாக இயக்கியுள்ளார்.

சுமார் அரை கிமீ தூரத்திலேயே கண்ணக்கோடு பகுதியில் தண்டவாளத்தில் மண் சரிந்து கிடப்பதை பார்த்து டிரைவர் ரயிலை நிறுத்த முயன்றார். அதற்குள் மண் குவியல் மீது மோதி ரயில் நின்றது. ரயில் மெதுவாக வந்ததால் பெரிய விபத்தில் இருந்து தப்பியது. மண் குவியல் அகற்றப்பட்டபின் சுமார் அரை மணி நேரம் கழித்து ரயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது.

**கூடலூர்:** நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. கூடலூர் முத்தமிழ் நகர் பகுதியில் மண்சரிந்து லேசான பிளவு ஏற்பட்டது.


வரி செலுத்துவோர் சேவைகளுக்கு பொறுப்பேற்றுள்ளது

ஜிஎஸ்டி 1 நாடு வரி சந்தை

சரக்கு மற்றும் சேவைவரிக்கு தயாராகுங்கள்

1 ஜூலை, 2017 முதல் சரக்கு மற்றும் சேவைவரி அமலாகிறது




ஜிஎஸ்டி பட்டியல் தயாரிப்பது எளிது!

**சரக்கு மற்றும் சேவைவரி பட்டியல்கள் (Invoices) வரையறுக்கப்பட்ட படிவத்தின்படி வழங்கப்பட வேண்டும் மேலும் பட்டியல் வழங்குவது நடைமுறை சுமையாகப் போகிறது என்று வணிக வட்டாரத்தில் சில ஐயங்கள் நிலவுகின்றன. அது சரியில்லை. பட்டியல் தொடர்பான ஜிஎஸ்டி விதிமுறைகள் குறித்த சில முக்கிய உண்மைகள் அனைத்து வணிகர்களின் தகவலுக்காக குறிப்பிட்டு தெரிவிக்கப்படுகின்றன.**

**வரி பட்டியல் குறித்த முக்கிய உண்மைகள்**

1. அனைத்து சரக்கு மற்றும் சேவைவரி வரிசெலுத்துவோர்கள் சுதந்திரமாக தங்கள் சொந்த பட்டியல் முறையை வடிவமைத்துக் கொள்ளலாம்.
2. சரக்கு மற்றும் சேவைவரி சட்டமானது பட்டியலில் சில நிரல்களை மட்டும் கட்டாயமாக்கியுள்ளது.
3. பட்டியல் வழங்குவதற்கான வரையறுக்கப்பட்ட கால வரம்பு சரக்குகள் & சேவைகளுக்கு வெவ்வேறானது – சரக்குகளுக்கு, அது விநியோகிக்கப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும் மேலும் சேவைகளுக்கு, சேவை வழங்கிய தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்.
4. சிறு சில்லரை விற்பனையாளர்கள், பதிவுபெறாத வாடிக்கையாளர்களுக்கு ஒரு பரிவர்த்தனையின் மதிப்பு ₹200 வரையாக சிறு பரிவர்த்தனைகளை அதிகளவு எண்ணிக்கையில் மேற்கொள்ளும் சிறு வரிசெலுத்துவோர்கள் இவ்வித ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பட்டியல் வழங்கவேண்டிய அவசியமில்லை. அவர்கள் நாள் முழுவதும் மேற்கொண்ட அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் ஒவ்வொரு நாளின் முடிவிலும் ஒரு கூட்டுப் பட்டியலை வழங்கலாம். இருந்தபோதும், வாடிக்கையாளர்கள் கோரினால் அவர்கள் பட்டியல் வழங்கவேண்டும்.
5. சாதாரண சூழ்நிலையில், சரக்கு எடுத்துச் செல்பவரால் பட்டியலின் ஒரு பிரதி மட்டும் எடுத்து செல்லப்படவேண்டும். இருந்தபோதும், GSTN ஒரு பட்டியல் மேற்கோள் எண் பெறுவதற்கு வசதியளிக்கிறது மேலும் ஒரு வரிசெலுத்துவோர் இந்த எண்ணை உருவாக்கிப் பெற்றிருந்தால், அவருடைய சரக்குகள் எடுத்துச் செல்லப்படுகையில் காகிதப் பட்டியலை சேர்த்து எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. இந்த செயல்பாடு காகித பட்டியல்கள் வைத்த இடம் மறந்துபோதல், பலபக்கங்களாக இருத்தல், சரக்கு போக்குவரத்தின்போது கிழிந்துபோதல் அல்லது தொலைந்து போதல் போன்ற அடிக்கடி புகாரளிக்கப்படும் பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது.
6. சிறு வரிசெலுத்துவோர்களுக்கு கீழ்ப்படிவு சுமையை குறைக்கும் வகையில், சரக்கு மற்றும் சேவைவரி சட்டமானது ₹1.5 கோடி வரையான ஆண்டு விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோர் பட்டியலில் சரக்குகளின் HSN குறியீட்டை குறிப்பிடவேண்டியதில்லை.
7. வங்கி, காப்பீடு மற்றும் பயணிகள் போக்குவரத்து துறையில் நிகழும் பெரிய அளவிலான பரிவர்த்தனைகளை கருத்தில் கொண்டு, வரிசெலுத்துவோர் தங்கள் பட்டியலில் வாடிக்கையாளர் முகவரி மற்றும் வரிசை எண்ணை குறிப்பிட வேண்டியதில்லை.
8. வழங்கப்படவேண்டிய அளவு தெரியாமல் வழங்குவதற்கான சரக்குகள் எடுத்துச்செல்லப்பட்டால் சரக்கினை விநியோக சலானைக் கொண்டு எடுத்துச்செல்லலாம். மேலும் விநியோகத்துக்கு பிறகு பட்டியலை வழங்கலாம்.
9. வரிவிதிப்பற்ற சரக்குகளுக்காக மதிப்புகூட்டு வரி பட்டியல் வழங்கப்பட்டிருந்தால் தனியாக பட்டியல் எதுவும் வழங்கத் தேவையில்லை.

davp 15502/13/0066/1718

ஜிஎஸ்டி விசாரணைக்கு @askGST_GoI காணவும்

MAKE IN INDIA வரிகள் செலுத்தப்படுகையில், ஒரு நாடு நிர்மாணிக்கப்படுகிறது

மத்திய கலால் மற்றும் சுங்கம் வாரியம் & மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களின் வணிகவரித் துறை
www.cbec.gov.in